தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

ஆணை எண். 109 /பேரூ/2021

நாள் 30.05.2022

திரு. சு. ராமராஜ்,
சக்கம்பட்டி, தேனி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
ஆண்டிபட்டி பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி பேரூராட்சி, நெ.320 தேனி மெயின் ரோடு, சக்கம்பட்டி என்ற முகவரியில் வசிக்கும் திரு. சு. ராமராஜ் என்பவரின் 31.08.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.09.2021ல் பெறப்பட்டு, 109/2021என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி பேரூராட்சி, நெ.320 தேனி மெயின் ரோடு, சக்கம்பட்டி என்ற முகவரியில் வசிக்கும் திரு. சு. ராமராஜ் என்பவர் தமது 31.08.2021 நாளிட்ட புகார் மனுவில் ஆண்டிப்பட்டி பேரூராட்சி வார்டு எண்.18ல் கதவு எண்.320A மற்றும் 319 வரிவிதிப்பு 8251 (தற்போது வரி எண்.10312) மற்றும் சொத்துவரி எண்.8252 (தற்போது வரி எண்.10285) ந.எண் 779/2021 நாள் 23.8.2021ல் தமது சகோதரர் ராஜசேகரன் கொடுத்த புகாரின் அடிப்படையில் தமது பெயரில் இருந்து தமது தந்தை சுப்பிரமணியத்தின் பெயரில் எந்தவிதமான முன் அறிவிப்பும் இல்லாமலும், தமது பக்க நியாயத்தை தகுந்த ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வாய்ப்பு தராமல் சட்டவிரோதமாக மாற்றப்பட்டுள்ளதால், தனது பெயரில் மேற்காணும் வீட்டுவரியை செலுத்த தகுந்த விசாரணை செய்து

நடவடிக்கை எடுக்கவும், தனது தந்தை லேட் சுப்பிரமணியம் பெயரில் கிரையம் பெற்ற சொத்து தொடர்பாக ஆண்டிப்பட்டி பிட் சர்வே எண்.488/1, 499/1 தொடர்பாக எந்தவொரு நீதிமன்றத்திலும் வழக்கு எதுவும் நிலையில் இல்லை என்றும், மேற்காணும் சர்வே எண்களில் உள்ள நிலங்கள் லேட் சுப்பிரமணியத்தின் பெயரில் கிரையமாக ஆவண எண்.702/1969 மற்றும் 354/1974, 3340/2002, 1624/1986 ஆகிய வருடங்களில் வாங்கப்பட்டு தமது (ராமராஜ்) பெயரில் பதிவுபெற்ற உயில் ஆவண எண்.33/III/2004 மூலம் தனக்கு கிடைக்கப்பெற்று அதில் குடியிருப்பு மற்றும் விசைத்தறி நடத்தி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் கொடுத்த நடவடிக்கைகள் கடிதத்தில் குறிப்பிட்ட வழக்கு எண்களில் ஆண்டிப.டி பிட்–1, சர்வே எண்கள்.488/1, 489/1 எதுவும் இல்லை என்றும், எனவே புகார் நகல் எதுவும் தராமல் சட்டவிரோதமாக மாற்றப்பட்டு, ஒருதலைபட்சமாக ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் மாற்றப்பட்டுள்ள மேற்கண்ட வீட்டுவரியை தமது பெயருக்கு மாற்றி உத்தரவிடுமாறு கோரி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு புகார் மனுவினை உரிய ஆதார ஆவணங்களுடன் அளித்துள்ளார்.

3. மனுதாரரது புகார் மனு மீது ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரது விளக்க அறிக்கை கோரப்பட்டது. ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 25.02.2022 நாளிட்ட விளக்க அறிக்கையில், "தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி பேரூராட்சி பிட் 1, சர்வே எண்கள் 488/1, 489/1ல் உள்ள இடத்தில் சொத்துவரி விதிப்பு எண்கள்.10285 க.எண்.319 மற்றும் வரி விதிப்பு எண்.10312 கதவு எண்.320A ஆகிய கட்டடங்களுக்கு சொத்து வரி திரு. சு. ராமராஜ் என்பவர் பெயரில் இருந்ததை மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ முறையீட்டு மனுவின் அடிப்படையில் பரிசீலனை செய்ததில், தக்க ஆவணம் இல்லாத காரணத்தினால், திரு. ராமராஜ் பெயரிலுள்ள வரிவிதிப்பை பேரூராட்சி ந.க.எண்.779/2021 நாள் 23.8.2021ல் பழைய கேட்பு பதிவேட்டின்படி அவரது தந்தை திரு. சுப்பிரமணியம் என்பவர் பெயருக்கு மாற்றம் செய்து உத்தரவிடப்பட்டது என்றும், தற்பொழுது ஆண்டிப்பட்டி வட்டாட்சியர் அலுவலக ந.க.எண்.5420/2021/ஆ1 நாள் 16.12.2021ன்படி திரு. சு. ராமராஜ் என்பவரது பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளதால், சொத்துவரி விதிப்பு எண்கள்.10285 கதவு எண்.319 மற்றும் வரி விதிப்பு எண்.10312 கதவு எண்.320A ஆகிய வரிவிதிப்புகள் திரு. ராமராஜ் என்பவரது பெயரிலேயே உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

4. ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையின்படி மனுதாரரது கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளதாக கருதப்பட்ட நிலையில், மேற்கண்ட அறிக்கையின் மீது மனுதாரர் தனது கருத்தினை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார். அதன் அடிப்படையில், மனுதாரர் தமது 19.5.2022 நாளிட்ட கடிதத்தில் தேனி மாவட்டம், ஆண்டிபட்டி பேரூராட்சி வார்டு எண்.18ல் கதவு எண்.320எ மற்றும் 319 வரி எண்.8251 (தற்போது 10312) மற்றும் வரி எண்.8252 (தற்போது வரி எண்.10295) ஆகியவற்றை தனது தந்தை சுப்பிரமணியத்தின் பெயரில் பெயர்மாற்றம் செய்தது குறித்து தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் புகார் செய்ததில் மீண்டும் தனது பெயருக்கு ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர்

ந.க.எண்.82/2022 நாள் 25.3.2022ல் பட்டா மற்றும் பதிவு உயில் மூலம் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் கட்டடங்களை ஆய்வு செய்து பெயர் மாற்றம் செய்துள்ளார் என்றும், எனவே தனது புகார் மனுவினை இத்துடன் முடித்து வைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

5. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், மனுதாரர் திரு. சு. ராமராஜ் என்பவரால் அளிக்கப்பட்ட புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளதாகக் கருதி, இப்புகார் மனு மீதான விசாரணையை இத்துடன் முடித்துவைக்கலாமென்று முடிவுசெய்து, அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022ஆம் ஆண்டு, மே திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/– x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு. சு. ராமராஜ், த/பெ சுப்ரமணியன்,
320 தேனி மெயின் ரோடு, சக்கம்பட்டி, ஆண்டிபட்டி, தேனி மாவட்டம்–625 512
செயல் அலுவலர்,
ஆண்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சி, ஆண்டிபட்டி, தேனி மாவட்டம்–625 512

பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

செயலாளருக்காக
30.5.22